**இலங்கை மன்றம் - 2018**

**முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை மன்றத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று , காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து மன்றத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் *நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்* பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு மன்றம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.3 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- மன்றத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- மன்றத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் இணங்கியிருந்ததா என்பதும்,

- மன்றம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- மன்றத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள்

### 1.4.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு

அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ''திட்டமிட்டு பேணுதல்'' நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

### 1.4.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் பிரகாரம் ஆதனங்களின் மீள் மதிப்பீட்டு மிகையானது உரிமை மூலதனத்தின் மாற்றங்கள் கூற்றில் வேறாக குறிப்பிடப்படவேண்டிய போதும் மீளாய்வாண்டின்போது வாகனங்களினதும் காணிகளினதும் மீள் மதிப்பீட்டின் போது உருவாக்கப்பட்ட மிகையான ரூபா 13,316,231 ஆன தொகையானது கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றமாகக் காட்டப்பட்டிருந்தது. | கணக்குகளில் வேறாக பொழிப்புரைகளின் கீழ் காட்டுவதாகக் கூறப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கியதாக நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.5 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடந்த வருடத்தில் மோட்டார் வாகனத்தினை மீள் பெறுமதியிட்ட போது ஏற்பட்ட வழுவைச் சரியாகச் சீராக்கம் செய்யத் தவறியமையாலும் மீளாய்வாண்டிற்கான மீள்பெறுமதியிடல் தொடர்பான மீள்பெறுமதியிடல் ஒதுக்கம் சரியாகக் கணிப்பிடப்படாமையாலும் நிலையான சொத்துக்கள் கணக்கு ரூபா 20,157,334 ஆல் குறைத்துக் காட்டப்பட்டதுடன் ஒட்டுமொத்த நிதியானது ரூபா 22,100,000 ஆல் மிகைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான மோட்டார் வாகனப் பெறுமானத் தேய்வானது ரூபா 1,942,666 ஆல் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | மீள்பெறுமதியிடலின் போது ஏற்பட்ட குறைபாடானது 2019 ஆம் வருடத்திற்கான கணக்குகளில் முறையாக சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டதாக கூறப்படுகிறது. | கணக்காய்வின் போது காட்டப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகளைத் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சட்டரீதியான உடமையாக்கப்பட்ட இல 27 இற்குரிய காணியின் பெறுமதியானது கணக்குகளில் சொத்தாகக் காட்டப்பட்டிருந்த போதும் அதில் அமைக்கப்பட்டுள்ள ரூபா 4,072,693 பெறுமதியான கட்டிடமானது 2017 ஆம் ஆண்டிற்கான மீள் பெறுமதியிட வேண்டிய சொத்துக்கள் கணக்கிலிருந்து நீக்கப்பட்டு மீள் பெறுமதியிடப்படாததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் மீண்டும் கணக்குகளில் எடுக்கப்பட்டிருந்தது. | கட்டிடங்களின் பெறுமதியிலிருந்து நீக்கப்பட்ட ஆனால் மன்றத்திற்குச் சொந்தமான பழைய தலைமையக கட்டிடத்தின் பெறுமதியானது ஏடுகளில் எடுக்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | இற்றைவரையில் கணக்குகளில் எடுக்கப்பட்ட சொத்துகளின் சொத்துப் பெறுமதியிடல் தொடர்பாக கவனம் ஈர்க்கப்படவேண்டும். |
| (இ) | 2017 ஆம் ஆண்டின் கணக்குகளிலிருந்து நீக்கப்பட்டதும் மீள்பெறுமதியிடப்படாததுமான ரூபா 12,019,502 பெறுமதியான இலங்கை தொலைக்காட்சி பயிற்சி நிறுவகக் கட்டிடமானது மீளாய்வாண்டின் போது மீள்பெறுமதியிடப் பட்டிருந்ததுடன் மீள் மதிப்பீட்டு தொகையான ரூபா 53,000,000 கணக்குகளில் பிற்போடப்பட்ட வருமானமாகக் காட்டப்பட்டிருந்தது. | இக்கணக்கீடானது தவறு காரணமாக ஏற்பட்டமையால் 2019 ஆம் வருடத்தில் திருத்தப்படுமென குறிப்பிடப்பட்டுள்ளது. | மீள் பெறுமதியிடல் மிகையானது முறையாகக் கணக்குகளில் எடுக்கப்படல் வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### பெற வேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நானாவித, கல்வி மற்றும் வியாபார அபிவிருத்திக் கூறுடன் தொடர்பான நிலுவை ரூபா 6,135,316 ஆக இருந்ததுடன் இது மொத்தப்பெற வேண்டியவைகளின் 60 வீதமாகக் காணப்பட்டது. அத்துடன் 01 முதல் 05 ஆண்டுகள் வரையிலான கடன்பட்டோர் மீதி ரூபா 3,977,990 ஆக இணங்காணப்பட்டதுடன் அக்கடன் நிலுவைகளை அறவிடுவதற்கான பொருத்தமான பொறிமுறையொன்றை ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | ரூபா 1,488,175 தொகையானது ஏற்கனவே அறவிடப்பட்டிருந்ததுடன் மிகுதித்தொகையான ரூபா 4,647,141 ஐ அறவிடுவதற்கான அறிவுறுத்தல்களை சட்டமா அதிபரிடமிருந்து பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | கடன் நிலுவையை உடனடியாக அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசின் நிதிபிரமாணக் கோவை. நிதிப்பிரமாணம் 761 | மீளாய்வாண்டின்போது விடுதிக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,455,250 பெறுமதியான சமையல் உபசரணங்கள் அடங்கலாக கையிருப்பு பதிவேடானது நாளது வரையாக்கப்படவில்லை | தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் கையிருப்புப் பதிவேடானது நாளதுவரையாக்கப்பட்ட முறையில் பேணப்படல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 34,683,516 தொகையான பற்றாக்குறையானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 1,906,195 ஆக இருந்நது. இதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 36,589,711 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. பயிற்சியும் கல்வியும், ஒப்பந்த சேவைகள், பராமரிப்பு, பெறுமானத்தேய்வு, ஏனைய செயற்பாட்டுச் செலவுகள் என்பவற்றில் ஏற்பட்ட ரூபா 88,511,786 ஆன அதிகரிப்பானது இவ் வீழ்ச்சிக்கான பிரதான காரணங்களாகும்.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2005 ஆம் வருடம் சேவையிலிருந்து விலகிய உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 289,196 ஆன தொகையையும் 2015 ஆம் வருடத்தில் பொருட்கள் திருட்டுடன் சம்பந்தப்பட்ட அறவிடவேண்டிய ரூபா 189,588 ஆன தொகையையும் அறவிடுவதற்கான எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. | இது தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. | உத்தியோகத்தர்களிடமிருந்து பெற வேண்டிய பணத்தை கால தாமதமின்றி அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து 2006-2009 காலப்பகுதியின் பொருட்டு அறவிடப்பட வேண்டிய நிறுத்தி வைத்த வரியாக ரூபா 1,375,812 ஆன தொகை இனங்காணப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டு இறுதியிலேனும் அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | பல சந்தர்ப்பங்கள் இப் பணத்தை மீள எடுப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும் திணைக்களத்தின் இக்கூறானது ஏற்கனவே மூடப்பட்டிருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | இவை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து அறவிடவேண்டியவை என்பதை நியாயப்படுத்தும் எழுத்து மூலமான ஆவணங்களைச் சமர்ப்பிப்பதன் மூலம் பெற வேண்டிய நிலுவையை அறவிடுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மின் பிறப்பாக்கியை செயற்படுத்துவதற்காகக் கொள்வனவு செய்யப்பட்ட எரிபொருளின் பெறுமதியானது குறித்த ஆண்டின் கிரயமாகப் பதிவளிக்கப்பட்டபோதும் மிகுதியான எரிபொருள் இருப்புக்களில் சீராக்கங்கள் செய்யப்படவில்லை. இருந்தபோதிலும் 2017 ஆம் ஆண்டில் ரூபா 628,180 தொகைக்கான 6600 லீற்றர் டீசலைக் கொள்வனவு செய்த போது 1331 லீற்றர் டீசலானது எஞ்சியிருந்ததுடன் 6470 லீற்றர் எரிபொருள் இருப்பானது 2019 மார்ச் 13 ஆம் திகதியில் எஞ்சியிருந்தது. | இவ் அவதானிப்பின் படி எதிர்காலத்தில் ஆண்டிறுதி இருப்புக் கணிப்பீட்டின் போது மின்பிறப்பாக்கியில் எஞ்சியிருக்கும் எரிபொருளானது கவனத்திற் கொள்ளப்படுமென குறிப்பிடப்பட்டுள்ளது. | ஆண்டிறுதியின் உள்ளவாறான எரிபொருள் இருப்பைச் சரியாக இணங்கண்டு தேவையான சீராக்கங்கள் செய்யப்படல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டின் போது 122 உயர் கல்வி டிப்ளோமா, தேசிய டிப்ளோமா, சான்றிதழ் கற்கை நெறிகள் மற்றும் பலதரப்பட்ட செயலமர்வுகளை நடாத்துவதற்காக நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட 15 விரிவுரையாளர்களின் மொத்த விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கை 2613.5 மணித்தியாலங்களாக இருந்ததுடன் இக்கற்கை நெறிகளுக்காக வெளிவாரி வளவாளர்களின் விரிவுரைகளுக்கான பங்களிப்பு 6680.75 மணித்தியாலங்களாக இருந்தது. நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான விரிவுரையாளர்களின் வருடாந்த சம்பளமும் இதர படிகளும் ரூபா 15,350,889 ஆனதுடன் வெளிவாரி வளவாளர்களுக்கு வழங்கப்பட்ட மீளாய்வாண்டிற்கான மொத்தப்படிகள் ரூபா 13,076,578 ஆக இருந்தது. ஒரு மணித்தியாலத்திற்கான வெளிவாரி வளவாளர்களின் விரிவுரைகளின் பெறுமதி ரூபா 1957 ஆக இருந்ததுடன் நிரந்தர விரிவுரையாளர்களின் ஒரு மணித்தியாலத்திற்குரிய விரிவுரைகளின் பெறுமதி ரூபா 5874 ஆக இருந்தது. | விரிவுரையாளர்களின் விரிவுரை மணித்தியாலங்கள் மட்டுமே கருத்திற் கொள்ளப்பட்டதுடன் கல்விப்பகுதியின் செயலாற்றல் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை எனக் குறிப்பிடப்படுகின்றது. | விரிவுரையாளர்களின் செயலாற்றல் மீளாய்வு செய்யப்படல் வேண்டும். |

## 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 3,150,846 பெறுமதியான கட்டிட நிர்மாண ஒப்பந்தத்தை தொடங்குவதற்கான முற்பணக் கொடுப்பனவாக ரூபா 1,500,000 அல்லது ஒப்பந்தப் பெறுமதியில் 47 சத வீதமானது பெறுகை | செயற்திட்டத்தின் மதியுரையாளரின் சான்றிதழின்படி மன்றத்தின் தலைவரின் அனுமதியுடன் இக்கொடுப்பனவு வழங்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகின்றது. | பெறுகை வழிகாட்டியின் வழிகாட்டல்களுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வழிகாட்டியின் 5.4.4(1) ஆம் பிரிவிற்கமைய முற்பணக் கொடுப்பனவிற்கான பிணை பெறப்படாது வழங்கப்பட்டிருந்தது. | | |

### 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தகவல் தொழிநுட்பப் பாடம், மனிதவள முகாமைத்துவப் பாடம் என்பவற்றைப் போதிப்பதற்காக அதற்குரிய கல்வித் தகைமைகளைக் கொண்டிராத ஒரு நிரந்தர விரிவுரையாளர் அப்பதவிக்காக நியமிக்கப்பட்டிருந்ததுடன் இணையத்தளத்தின் ஊடான தகவல் தொழிநுட்பப் பயிற்றுவிப்பு நடவடிக்கைகளுக்கான (E-Gate) செயற்றிட்டத்திலும் இணைக்கப்பட்டிருந்தார். | மதியுரையாளரின் தகவல் தொழிநுட்ப அறிவு காரணமாக இம்மதியுரையாளர் தகவல் தொழிநுட்பத்திற்கான சர்வதேச பாராட்டைப் பெற்றிருந்தமையாலும் இலங்கையில் முதல் தரமாக தொலைநோக்கு கல்வி மூலம் தொலைநோக்குக் கல்விற்கான மென்பொருளை உருவாக்கியமையாலும் தொலைநோக்கு கல்விற்கான கற்பித்தலை இலகுபடுத்துவதற்கான சேவைகள் வழங்கப்படுவதாகக் கூறப்படுகின்றது. | தொலைநோக்கு கல்வி நடவடிக்கைகளை இலகுபடுத்துதற்காக இருப்பினும் தகைமையுள்ள மதியுரையாளர்களே நியமிக்கப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2010 திசெம்பர் 14 ஆந் திகதிய 55 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 15 ஆம் பிரிவிற்கு இணங்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பரிந்துரையானது நிர்வாகச் சபைக் கூட்டங்களின்போது சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பரிந்துரையானது நிர்வாகச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் அவை சம்பந்தமாக எடுக்கப்பட்ட தீர்மானங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |